# ரிதீகம பிரதேச சபை

# குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 25 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 22 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 11 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரிதீகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசோட்டம் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது தேசிய திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தில் இருந்து சபைக்கு நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 2,587,200 இற்கான இரண்டு டிரக்டர் மற்றும் டேலர்களுக்கு பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 63,000 பெறுமதியான ஹலர் இயந்திரம் ஒன்றினை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த ரூபா 2,766,548 இற்கான சம்பள மீளளிப்பு பெறுவனவுகள் ஆண்டிற்கான வருமானம் எனக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 195,760 முத்திரை கட்டண செலவு ரூபா 139,685 என அதாவது ரூபா 56,075 தொகை குறைவாகவும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ரூபா 63,049 இற்கான முத்திரை கட்டணம் மீதி ரூபா 78,498 என அதாவது ரூபா 15,499 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்காக ஓய்வூதிய பணிக்கொடை செலுத்துவதற்காக பெற்றிருந்த ரூபா 601,399 இற்கான செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடை கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்கு பதிலாக பலவின வைப்புகக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,023.892 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான பில் போடப்படல், பெறுவனவுகள், இறுதி மீதி மற்றும் வைப்புக்களின் கீழ் 14 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் நேரொத்த பெறுமதி ரூபா 2,626,418 இனால் இணக்கமின்மை காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 94,025,683 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 35,395,490 தொகை 3 வருடங்களை விட பழமையான மீதியாகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 50,715,412 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 13,413,044 தொகை 1 வருடத்தை விட பழமையான மீதியாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மைகள்

--------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 38,009,708 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,711,199 ஆக

காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,106,177 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,605,022 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 37,339,567 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 39,448,588 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 5,602,178 வரை குறைந்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக சபையின் மொத்த மீண்டுவரும் வருமானங்கள் ரூபா 44,917,508 இல் நூற்றிற்கு 86 ஆகிய சுமார் ரூபா 38,610,408 தொகை உருவாக்கிய வருமானமல்லாத நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரைக் கட்டணம் மற்றும் சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளது. அதே போல் ரூபா 37,399,567 இற்கான மொத்த மூலதன வருமானமும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களில் இருந்து வேறு நிறுவனங்களில் அதிகார பிரதேச அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணம் அடங்குகின்றது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 37,206,308 இல் நூற்றிற்கு 68 ஆகிய ரூபா 25,363,809 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 91 ஆகிய ரூபா 22,992,172 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 39,448,588 இல் நூற்றிற்கு 9 என ரூபா 3,416,884 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதியின் நூற்றிற்கு 91 ஆகிய சுமார் ரூபா 36,031,704 தொகை மகநெகும, கமநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

-----------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வாடகை, குத்தகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்ட ஏற்பாடுகள் விதித்தில்லாத போது சபை நிதி சேகரிப்போரினால் ஆண்டு பூராகவும் அவ்வாறான வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

-----------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 2,598,160 ஆக காணப்பட்டதுடன் வருடாந்த பில் போடப்பட்டவை ரூபா 1,819,977 ஆகும். 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 32 – 42 வரை விதிகளின் பிரகாரம் காலாண்டு அடிப்படையில் நிலுவை பட்டியல் தயாரித்து குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கிய பின்னர் ஆதனங்களை தடை செய்து நிலுவை வீத வரியை அறவீடு செய்யும் நடைமுறை பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

2.3.3 குத்தகை

-------------

குறை விலை கூறல் ரூபா 450,000 தல்கஸ்பிட்டிய மாட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு எடுப்பதற்காக 2011 ஆண்டு முதல் கேள்விகாரர்கள் முன்வந்திருந்திருக்கவில்லை. அதே போல் 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் போது சபையினால் வாடகைக்கு கொடுத்திருந்த 4 சொத்துக்கள் தொடர்பாக ரூபா 2,421,710 இற்கான நிலுவை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3.4 வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம்

------------------------------------------------------------------------------

10 வருட காலமாக காணப்படும் வியாபார அனுமதிப்பத்திர நிலுவை தொடங்கஸ்லந்த உப அலுவலகத்திற்கான ரூபா 63,979 தொகையும், தலைமை அலுவலகத்திற்கான ரூபா 478,485 உம் ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-------------------------------------------------

சபையினால் 2008 -2011 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 264 விண்ணப்பங்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத 244 இடங்கள் காணப்பட்டன. அக் கட்டடங்கள் அனைத்தும் நிர்மாணித்திருந்தால் சபையின் துணை விதியின் பிரகாரம் ரூபா 48,800 இற்கு இணக்கச் சான்றிதழ் வருமானம் உழைக்கக் கூடியதாக இருந்தது. கட்டடங்களின் நிர்மாண வேலை முடிவடையவில்லை எனின் அனுமதிப்பத்திரத்தின் காலத்தை நீடிப்பதற்கான கட்டணத்தை அறவீடு செய்வதற்கான ஏற்பாடுகள் சபையில் ஆக்கியிருக்கவில்லை.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து பெற்றிருந்த ரூபா 800,000 ஏற்பாடுகளின் கீழ் சபையினால் முன்பள்ளி உபகரணங்கள் கொடுப்பனவு செய்யும் போது குறைந்த விலை சமர்பித்திருந்த மற்றும் இரண்டு வருட உத்தரவாத காலம் சமர்பித்திருந்த நிறுவனத்தின் கூறுவிலை இரத்து செய்துவிட்டு கூடியவிலை மற்றும் ஒரு வருட உத்தரவாத காலம் வழங்கியிருந்த நிறுவனத்தினர் பண்டங்கள் தரமானவை எனவும் விரைவாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டு அந் நிறுவனத்தில் இருந்து கொள்வனவு செய்வதற்காக சபை விதப்புரை வழங்கியுள்ளது. இதன் காரணமாக சபைக்கு ரூபா 197,600 தொகையொன்று குறைந்த விலையை விட கூடுதலாக செலுத்த வேண்டியிருந்தது.

3.3 செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல்

----------------------------------------------------------

2011 ஆண்டின் போது பிலிசரு செயற்திட்டத்தின் கீழ் சேதனப் பசளையினை பெற்று கன்றுகள் உற்பத்தி செய்து விற்பனவு செய்யும் குறிக்கோளுடன் நாட்டுமேடை ஒன்று மற்றும் விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்காக ரூபா 332,284 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

பிலிசரு செயற்திட்டத்தின் கீழ் சேதனப் பசளை உற்பத்தி மேற்கொள்ளப்படாமையால் நாட்டு மேடையும் ஆரம்பிக்கபட்டிருக்கவில்லை.

4 கணக்கு விடயத் தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சம்பளங்கள் படிகள் ரூபா 2,987,809 இனாலும் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 31,708,438 மிகைத்தல் ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 5,156,790 ஆக காணப்பட்டதுடன் அறவீடு செய்யப்பட்டிருந்த வருமானம் ரூபா 3,109,599 ஆகும்.

(இ) சபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 2,549,990 பெறுமதியான 03 மூலதன விடயங்களின் மற்றும் ரூபா 1,344,000 இற்கான 15 நலன்புரி விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்